பொது ஸ்தாபனங்களும் கொடுக்க முன்வரலாம். ஆகவே, அரசாங்கத்திற்கு இயலாது என்ற காரணத்தை முன்னிட்டு ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன், மற்ற பொது ஸ்தாபனங்களுக்குச் சொல்லி, அவர்கள் மூலமாவது வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது ஒரு நல்ல யோசனை. இதை எந்தெந்த நிறுவனங்கள் செய்வதற்கு முன்வருகின்றனவோ, அவற்றிற்கு கூடுமான வரையில் அரசாங்கம் தனது தார்மீக உதவிகளைச் செய்ய முன்வரும்.

Library Education in schools

314 Q—THIRU R.R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state--

(a) whether there are proposals under the consideration of the Government to introduce compulsory Library Education in schools both Primary and Secondary, in this Ssate;

(b) if so, the details thereof; and

(c) the total number of pupils likely to be covered by this scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) 6, 7, 8 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்ட வரைவில் தமிழ் மொழி பாடத்திட்டத்தில், வாரத்திற்கு ஒரு பீரியேடு நூல் நிலையப் படிப்பிற்கென ஒதுக்கப்பட்டு உள்ளது. ஆறும் வகுப்பில் தமிழ் பாடத்திற்குப் புதிய பாடத் திட்டம் 1973-74 முதல் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைக்கு வந்துள்ளது. உயர் வகுப்புகளில் புதிய பாடத் திட்டம் எவ்வாண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(உ) அனைத்துப் பள்ளிகளுமே இயன்றவரை மேற்சொன்ன பாடத் திட்டக் கோட்பாட்டைச் செயல்படுத்த முயலும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தற்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்கள் மாணவர்களால் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. ஆகவே, வகுப்புப் பாகுபாடு இல்லாமல் எல்லா வகுப்புகளிலும் வாரத்திற்கு ஒரு பீரியட் கட்டாயமாக வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

1974 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதல் கட்டமாக 6, 7, 8 வகுப்புகளுக்கு நாம் ஒரு பீரியட் கட்டாயமாக ஆக்கியிருக்கிறோம். புதிய பாடத் திட்டம் விரைவில் வரும்பொழுது 9, 10, 11 வகுப்புகளுக்கு அந்த முறை மேற்கொள்ளப்படும். ஆகவே, மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதிலே அக்கறை செலுத்த, அதையும் ஒரு வகுப்பில் எண்கள் பெறுவதற்குரிய பாடத் திட்டமாக ஆக்கலாமா என்பதைப்பற்றி நாம் இப்பொழுது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். பரீட்சார்த்தமாக சில பல பள்ளிகளில் அது வைக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல முறையில் வெற்றிகரமாக நடக்குமேயானால், அதைத் தொடர்ந்து நீடிக்கவும் அரசு முயலும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நூலகங்கள் இருக்கின்றனவா? நூலகங்களில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவா? நூல்நிலையம் இல்லாத பள்ளிகள் இருக்குமானால் அந்தப் பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல பள்ளிகளிலே நூலகங்கள் இருக்கின்றன. சில பள்ளிகளிலே நூலகங்கள் இல்லை. நூலகங்கள் இல்லாத பள்ளிகளில் ஆண்டுதோறும் நாம் நூலகங்கள் வைப்பதற்கு உதவி செய்து வருகிறோம். குறிப்பாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 508 உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1966-67-லிருந்து 1968-69 முடிய 513 பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1973-74-ல் 1,700 உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1974-75-ல் மேலும் 342 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலகங்கள் அமைக்க மானியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, எல்லாப் பள்ளிகளிலும் நூலகங்கள் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற கொள்கையை வைத்துத்தான் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு பீரியட் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற முறையை மேற்கொண்டிருக்கிறோம். இது படிப்படியாகக் கவனிக்கப்படும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education and Tourism whether this will be a compulsory curricular subject or non-curricular subject and if so, whether it would come for examinations?

[1974 மார்ச் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அது பரிட்சைக்குரிய பாடமாக வைக்கப்படவில்லை. இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 உயர்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலே 50 எண்கள் என்ற அளவுக்கு நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டு, இப்பொழுது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமான சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால், அதையும் பரிட்சைக்குரிய பாடமாக ஆக்கலாமா என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இது பரிட்சார்த்தமான நிலையில் இருந்து வருகிறது.

Grants to Singanallur Municipal School

* 315 Q.—THIRU N. DENNIS.—Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Singanallur Municipal Council has requested the Government to give advance grant to pay the teaching staff during September-October, 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சிங்கநல்லூர் நகராட்சிக்கு முன்மானியம் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும் 1973 ஆம் ஆண்டு—

(1) 31—3—1972 வரை ஆரம்பக் கல்விக் கணக்கில் சேர்ந்திருந்த பற்றுக்குறையினைத் தீர்க்க ரூ. 2,19,000 மானியமும்,

(2) 31—3—1972 வரை ஆரம்பக் கல்விக் கணக்கில் சேர்ந்திருந்த பற்றுக்குறையினைத் தீர்க்க ரூ. 1,00,000 கடனும் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டது.

திரு. என் டென்னிஸ் : பொதுவாக வாழ்க்கைச் செலவை நடத்த சம்பளத்தையே வைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வித காலதாமதத்தினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஆசிரியர்களுக்கு இந்த அட்வான்ஸ் பேமெண்டு அல்லது வேறு ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு இவர்களுக்கு சம்பளம் உடனடியாகக் கிடைப்பதற்கு வழி வகுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS